# மத்திய மாகாண சபையின்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மத்திய மாகாண சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை என்னால் தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) மாகாண சபை நிதியக் கணக்கு**

மாகாண சபை நிதியக் கணக்கு 2012 மார்ச் 28 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஏனைய கணக்குகள்**

2012 மார்ச் 31 ஆம் திகதி வரை மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

2011 ஆம் ஆண்டிற்குரிய

| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| i. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று | 01 | 01 | - |
| ii | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 33 | 33 | - |
| iii | வருமானக் கணக்குகள் | 02 | 02 | - |
| iv | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 66 | 66 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| v | வணிக முற்பணக் கணக்குகள் | 06 | 04 | 02 |
| vi | நிதியக் கணக்குகள் | 01 | 01 | - |
| vii | நியதிச்சட்டக் கணக்குகள் | 01 | 01 | - |
| viii | மாகாண சபை உறுப்பினர் களுக்கான முற்பணக் கணக்குகள் | 01 | 01 | - |
| | | 111 | 109 | 02 |

### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது 213 இறுதி இருப்பு உருப்படிகளின் பெறுமதியை கணக்கீடு செய்யாமை, நியம படிவத்தில் காசுப் பாய்ச்சல் கூற்றொன்றைத் தயாரித்து சமர்ப்பிக்காமை மற்றும் அதிகாரசபைக்கு ஆரம்பத்தில் ஒப்படைக்கப்பட்ட சொத்துக்கள் சரியான பெறுமானத் தேய்வுக் கொள்கையின் பிரகாரம் பெறுமானத் தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 1.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

11 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம், மீதிகள் ரூபா 460,051,860 கூட்டுமொத்தமாக இருந்ததுடன், துணைப் பதிவேடுகள்/அறிக்கைகளின் பிரகாரம் கணக்குகளின் மீதி ரூபா 453,071,939 கூட்டுமொத்தமாக இருந்தது.

### 1.2.4 வங்கி கணக்கிணக்கக் கூற்று

(அ) நெசவுக் கைத்தொழில் திணைக்களத்திற்குரிய வங்கிக் கணக்கொன்று 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 06 மாத காலத்திற்கு மேற்பட்டிருந்த தேறாத வைப்புக்கள் ரூபா 2,413,290 தொடர்பாக வங்கியிடம் விசாரித்து பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 04 வங்கிக் கணக்குகளுக்குரிய இனங்காணப்படாத வரவு ரூபா 199,632 ஆக இருந்ததுடன், 10 வங்கிக் கணக்குகளுக்குரிய இனங்காணப்படாத செலவு ரூபா 748,551 ஆகவும் இருந்தன.

**1.2.5 செலுத்த வேண்டிய கணக்குகள்**

ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 268,613 ஆக இருந்தது.

**1.2.6 கட்டுநிதிக் கணக்குகள்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத ரூபா 4,151,773 தொகையான கட்டுநிதி வரவு மீதிகள் காணப்பட்டன.

**1.2.7 பொது வைப்புக் கணக்குகள்**

நிதிப்பிரமாணம் 571 ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது 2011 திசெம்பர் 31 இல் 02 ஆண்டுகள் காலாவதியான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 67,074,965 ஆக இருந்தது.

**1.2.8 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 91 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கப்படாதிருந்ததுடன், அந்த ஐயவினாக்களில் உள்ளடக்கப்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 99,777,048 ஆக இருந்தது.

**(ஆ) தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 1,014,847,430 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(இ) கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களை கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்காமை**

ரூபா 82,957,555 கூட்டுப்பெறுமதியுடைய 125 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.9 இணக்கமின்மைகள்**

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (i) தாபன விதிக்கோவை | |
| xix ஆம் அத்தியாயத்தின் 6.14 மற்றும் 7.1 ஆம் பிரிவு | கண்டி மாகாண கல்வித் திணைக்களத்திற்குச் சொந்தமான அரச வீடு ஒன்றில் தலைமை அமைச்சின் உதவிச் செயலாளர் ஒருவர் 2010 யூலை 16 ஆம் திகதி ஆம் திகதி முதல் குடியிருந்ததுடன் 2010 ஒக்தோபர் மாதம் ஓய்வு பெற்றிருந்தார். 2011 திசெம்பர் வரையில் அவ்வீடு அவரால் திருப்பி ஒப்படைக்கப்படாமல் இருந்ததுடன், அது தொடர்பாக தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| xii ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவு | நாவுல வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய பதவியணியில் 36 பேரும் அம்பன மஹா வித்தியாலயத்தின் 23 ஆசிரியர்களும் 2011 ஆம் ஆண்டில் முறையான அங்கீகாரம் இல்லாமல் 212 அமைய மற்றும் ஓய்வு விடுமுறைகளையும் 79 1/2 கடமை விடுமுறைகளையும் பெற்றுக் கொண்டிருந்தனர். |

| | |
|---|---|
| xix ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவு | நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான அரச உத்தியோகபூர்வ விடுதியிலிருந்து ரூபா 101,712 உம், அட்டவணைப்படுத்தப்படாத 02 அரச உத்தியோகபூர்வ விடுதிகளிலிருந்து ரூபா 114,331 உம் மத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான 04 அரச உத்தியோகபூர்வ விடுதிகளிலிருந்து ரூபா 205,782 உம் உடதும்பர வைத்தியசாலையின் 05 அரச உத்தியோகபூர்வ விடுதிகளிலிருந்து ரூபா 134,227 உமாக ரூபா 556,052 கூட்டுத்தொகையான வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |

(ii) <u>நிதிப்பிரமாணம்</u>

| | |
|---|---|
| நி.பி.104 மற்றும் 110 | 2003 முதல் 2007 ஆம் ஆண்டு வரை நுவரெலியா பிரதேச மருந்து களஞ்சியத்தின் இருப்பு அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 11,180,068 ஆன இருப்பு பற்றாக்குறை, நட்டங்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தப்படாமல் இருந்ததுடன், அது தொடர்பாக ஆரம்ப அறிக்கையொன்று வழங்குவதற்கும் தொடர் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| நி.பி 156(7) | பள்ளேகலை ஆயுர்வேத உற்பத்தி தொழிற்சாலையின் உலர் மருந்து இருப்பு தேவைப்பாடு தொடர்பாக கருத்திற்கொள்ளாமல் கூடுதலாகக் கொள்வனவு செய்தமையால் ரூபா 2,200,876 பெறுமதியான 07 வகையான 1232 கி.கி அளவிலான உலர் மருந்து 2011 நவெம்பர் 23 ஆம் திகதி வரையில் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டன. |
| நி.பி 264 | நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 14 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 399,939 |

பெறுமதியான கொடுப்பனவுகளுக்குரிய பணம் பெற்றுக்கொண்டமைக்காக பெறுவோரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) <u>மத்திய மாகாண நிதி விதிகள்</u>

116(1)

(அ) மோட்டார் வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரம் நிலுவையில்லாமல் அறவிடப்பட வேண்டிய போதிலும், கண்டி, நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களுக்குரிய 26 பிரதேச செயலகங்களால் 2011 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையில் ரூபா 54,288,621 தொகையான மோட்டார் வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் நிலுவையாக காணப்பட்டன.

(ஆ) மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்குரிய 05 பிரதேச செயலகங்களில் ரூபா 651,853 தொகையான நிலுவை காணி வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(இ) மாத்தளை மாவட்டத்தின் வில்கமுவ பிரதேச செயலகத்திற்குரிய அறவிடப்பட வேண்டிய நீண்டகால குத்தகை ரூபா 3,149,420 ஆக இருந்தது.

142.2

வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான ஜனசவிகம 28 ஆம் இலக்க வீடு மற்றும் 02 ஆம் இலக்க விவசாயப் பண்ணையுடன் கூடிய காணியை மாகாண விவசாயத் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு அதிகார சபையால் 2004 ஆம் ஆண்டின் போது இணக்கம் காணப்பட்டிருந்த போதிலும், பொறுப்பேற்றல் நடவடிக்கை முறைப்படி நிறைவேற்றப்படாததன் காரணமாக 2011 ஆம் ஆண்டு வரையில் தாமதக்

| | |
|---|---|
| | கட்டணமாக ரூபா 361,864 பணத்தை மாகாண விவசாயத் திணைக்களம் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தியிருந்தது. |

(vi) <u>பொது நிர்வாகச் சுற்றறிக்கை</u>

| | |
|---|---|
| 1994 யூலை 01 ஆம் திகதிய 24/94 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு மற்றும் 2001 சனவரி 15 ஆம் திகதிய 01/2001 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | சேகரிக்கப்படும் விதவை அநாதைகள் ஓய்வூதிய பங்களிப்புத் தொகையை, நிதியத்திற்கு அடுத்த மாதத்தின் 05 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட ரூபா 528,726,079 ஆன பங்களிப்புத் தொகை அந்நிதியத்திற்கு அனுப்பப்படாமல் வருமானத் தலைப்பு இலக்கம் 2003-90-01 (நானாவித வருமானம்) இன் கீழ் மாகாண சபை வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. |
| 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தி | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு 06 மாதங்களுக்கு ஒரு முறை பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், காணித் திணைக்களத்திற்குச் சொந்தமான 03 வாகனங்கள் மற்றும் மாத்தளை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 60 வாகனங்கள் தொடர்பாக அந்நியதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2009 மார்ச் 05 ஆம் திகதிய 10/2007(i) ஆம் இலக்க சுற்றறிக்கை | வீட்டு வசதிகள் வழங்கப்படாத கௌரவ அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு வாடகை அடிப்படையில் வீடுகள் வழங்கும் பொருட்டு இடமளிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் கீழ் பிரதி அமைச்சர் மற்றும் அதற்குச் சமமான தரத்திற்கு உட்படாத மத்திய மாகாண சபையின் பிரதித் தலைவருக்காக 2010 யூலை 01 ஆம் திகதி முதல் 2011 ஆகஸ்ட் வரை மாதமொன்றுக்கு ரூபா 26,650 வீதம் ரூபா 293,150 வீட்டு வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| 1987 சனவரி 05 ஆம் திகதிய 887 ஆம் இலக்க சுற்றறிக்கை | வீடுகளுக்காக சிக்கன வாடகை வருடாந்தம் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதும், மாத்தளை கல்வி திணைக்களத்திற்குரிய 17 அதிபர் விடுதிகளிலிருந்து 1998 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்டிருந்த சிக்கன வாடகையை அடிப்படையாகக் கொண்டு 2011 ஒக்தோபர் வரையில் வீட்டு வாடகை அறவிடப்பட்டிருந்ததுடன், மாகாண சுகாதார திணைக்களத்தின் 02 வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் 01 இன் அரச உத்தியோகபூர்வ விடுதிகளில் குடியிருப்பவர் களிடமிருந்து 2009 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட சிக்கன வாடகையை அடிப்படையாகக் கொண்டு 2011 ஆம் ஆண்டு வரையில் வீட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது. |

(v) <u>திறைசேரிச் சுற்றறிக்கை</u>

| | |
|---|---|
| 2004 பெப்ரவரி 12 ஆம் திகதிய ஏடிஎஸ்ஈசீஜி/எம்/ஐ/ எஸ்சீ/4 ஆம் இலக்க சுற்றறிக்கை | அலுவலக நேரத்தில் நடாத்தப்படுகின்ற பணிப்பாளர் சபை கூட்டங்களுக்காக பணிப்பார் சபை கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்படாதிருக்கையில் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபையால் 11 சந்தர்ப்பங்களின் போது அலுவலக நேரத்தில் நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபை கூட்டங்களுக்காக ரூபா 136,550 கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன. |

(vi) <u>ஏனைய சுற்றறிக்கைகள்</u>

| | |
|---|---|
| 2010 மே 25 ஆம் திகதிய 4/2010 ஆம் இலக்க ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை மற்றும் சேமலாப நிதியத்தின் முகாமைச் சபைத் தலைவரின் சுற்றறிக்கையின் 3 மற்றும் 8(1) ஆம் பந்திகள் | கல்பாலம் பண்ணையில் அமைய அடிப்படையில் சேவை புரிகின்ற 10 தொழிலாளர்களின் சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட்டு அரச சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையாக ரூபா 151,600 ஐ அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| 2008 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய சீபீசீ/சீஎம்/ரீஆர்/312/3 ஆம் இலக்க மத்திய மாகாண போக்குவரத்து ஆணையாளரின் வாகன அனுமதிப்பத்திரக் கட்டண திருத்திய சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளை தவறாக அர்த்தப்படுத்தி குண்டசாலை பிரதேச செயலகத்தால் 2008 ஒக்தோபர் 08 ஆம் திகதி முதல் 2009 திசெம்பர் 30 ஆம் திகதி வரை 8326 வாகனங்களுக்கு ரூபா 3,234,446 வாகன அனுமதிப்பத்திரக் கட்டணம் கூடுதலாக அறவிடப்பட்டிருந்தது. |
| 2006 மே 15 ஆம் திகதி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயத்தின் முத்திரை வரி சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | அறவிடப்படுகின்ற முத்திரைக் கட்டணம் காலாண்டு முடிவடைந்து அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக தம்புள்ள பிரதேச செயலகத்தால் 2011 ஆகஸ்ட் மற்றும் திசெம்பர் ஆகிய மாதங்களில் அறவிடப்பட்டிருந்த ரூபா 370,000 தொகையான முத்திரைக் கட்டணங்கள் 2012 பெப்ரவரி 16 ஆம் திகதி வரை அனுப்பி வைக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. |
| கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு செயலாளரின் 2011 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 2001/28 ஆம் இலக்க சுற்றறிக்கை | தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கைக்கு இணங்க விருப்பத்திற்குரிய பாடசாலையொன்றில் ஆகக்கூடிய சேவைக்காலம் 08 ஆண்டுகளுக்கும், மிகவும் விருப்பத்திற்குரிய பாடசாலையொன்றில் ஆகக்கூடிய சேவைக்காலம் 06 ஆண்டுகளுக்கும், என வரையறுக்கப்பட்டிருந்த போதிலும்,மாத்தளை கல்வி அலுவலகத்திற்குரிய 82 மாகாண சபை பாடசாலைகளுக்கும் நாவுல வலயத்திற்குரிய 32 பாடசாலைகளுக்கும் இணைக்கப்பட்டிருந்த 524 ஆசிரியர்கள் மேற்படி ஆகக் கூடிய சேவைக்காலம் தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் 10 ஆண்டுகள் முதல் 34 வரையான காலமாக ஒரே பாடசாலையில் சேவை புரிந்து வருகின்றனர். அவ்வாறே நுவரெலியா வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய பாடசாலைகளில் 79 ஆசிரியர்கள் 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட |

| | | |
|---|---|---|
| | | காலமாகவும் ஹங்குரன்கெத்த வலயத்தின் மகளிர் பாடசாலையொன்றில் 21 ஆசிரியர்களும், 06 முதல் 18 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஒரே பாடசாலையில் சேவை புரிந்து வருகின்றனர். |
| | 1974 சனவரி 10 ஆம் திகதிய 93/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரத்தின் 43.2 ஆம் பந்தி | பதிவு செய்யப்பட்ட அனைத்து கூட்டுறவுச் சங்கங்களும் வருடாந்த தேறிய இலாபத்தில் ரூபா 5 இற்கு குறையாத மற்றும் 10% இற்கு மேற்படாத தொகையொன்றை கூட்டுறவு நிதியத்திற்கு வருடாந்தம் பங்களிப்பாகச் செலுத்த வேண்டிய போதிலும், மத்திய மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 431 கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பாக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 34,091,800 பங்களிப்புத் தொகை நிலுவையாக இருந்தன. |
| (vii) | 2000 இன் 01 ஆம் இலக்க மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபை நியதிச் சட்டத்தின் 6 மற்றும் 19(ஆ) பிரிவு | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வீதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபையின் தலைவரால் மீளாய்வாண்டின் சனவரி முதல் ஒக்தோபர் வரையான காலப்பகுதியில் 142 வீதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (viii) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.6 ஆம் பந்தி | ஏதேனும் ஒப்பந்தமொன்றின் வேலை பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டதன் பின்னர், அதன் நிறுத்தி வைத்தல் தொகையிலிருந்து 50% விடுவிக்க முடியுமான போதும், அதற்கு முரணாக தலைமை நிர்வாக கட்டிடத் தொகுதி நிர்மாண வேலையின் I ஆம் கட்டத்தின் 1,2,3 ஆம் அலகுகளுக்குரிய வேலைகள் நிறைவேற்றப்படா திருக்கையில் மத்திய மாகாண பொறியலாளர் சேவைகள் பணிப்பாளரின் பரிந்துரை அடிப்படையில் 2011 திசெம்பர் 28 ஆம் திகதி ரூபா 22,328,723 |

ஆன நிறுத்தி வைத்தல் பணம் ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அதற்குரிய வேலை நிறைவு அறிக்கையொன்று இருந்தாலும் கூட 5% ஆன ரூபா 19,980,000 செலுத்தக்கூடியதாக இருந்த போதிலும், ரூபா 22,328,723 தொகையைச் செலுத்திமையால் ரூபா 2,348,723 ஆன நிறுத்தி வைத்தல் பணம் ஒப்பந்தகாரருக்கு கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக மாகாண சபை நிதியத்தில் ரூபா 1,114,308,964 மிகையாக இருந்ததுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 79,374,440 ஆக இருந்தது. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மிகையில் ரூபா 1,034,934,525 ஆல் அதிகரிப்பொன்று இடம்பெற்றிருந்தது.

## 2.2 வருமானங்களும் செலவுகளும்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

வருமானம்

| | 2011 | | | 2010 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப்பட்டவை | உள்ளபடியானவை | முரண் | பாதீடு செய்யப்பட்டவை | உள்ளபடியானவை | முரண் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| <u>மாகாண சபை விடயங்களுக்குரிய வருமானம்</u> | | | | | | |
| வரி வருமானம் | 3,324,845,000 | 3,685,121,035 | (360,276,035) | 3,031,850,000 | 2,668,851,691 | 362,998,309 |
| வரியல்லாத வருமானம் | 325,155,000 | 941,317,077 | (616,162,077) | 348,150,000 | 322,880,166 | 25,269,834 |
| அரசாங்க மானியம் | 17,947,529,836 | 16,028,726,530 | 1,918,803,306 | 16,087,468,591 | 15,774,747,134 | 312,721,457 |
| | 21,597,529,836 | 20,655,164,642 | 942,365,194 | 19,467,468,591 | 18,766,478,991 | 700,989,600 |

செலவுகள்

--------------------

| மீண்டுவரும் செலவினம் | 2011 பாதீடு செய்யப்பட்டவை ரூபா | 2011 உள்ள படியானவை ரூபா | 2011 முரண் ரூபா | 2010 பாதீடு செய்யப்பட்டவை ரூபா | 2010 உள்ள படியானவை ரூபா | 2010 முரண் ரூபா |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| ஆளணி வேதனம் | 14,155,870,094 | 14,127,954,312 | 27,915,782 | 12,961,780,572 | 12,837,315,322 | 124,465,250 |
| ஏனையவை | 2,870,629,876 | 2,798,516,870 | 72,113,006 | 3,297,583,685 | 3,008,433,206 | 289,150,479 |
| உப கூட்டுத்தொகை | 17,026,499,970 | 16,926,471,182 | 100,028,788 | 16,259,364,257 | 15,845,748,528 | 413,615,729 |
| மூலதன செலவினம் | 4,571,029,864 | 2,614,384,495 | 1,956,645,369 | 3,618,438,759 | 2,841,356,023 | 777,082,736 |
| | 21,597,529,834 | 19,540,855,677 | 2,056,674,157 | 19,877,803,016 | 18,687,104,551 | 1,190,698,465 |

மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவினம் ரூபா 19,540,855,677 ஆக இருந்தது. இதில் 87% மீண்டுவரும் செலவினமாக இருந்ததுடன், 13% மூலதனச் செலவினமாக இருந்தது

**2.3 வருமான நிர்வாகம்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்குகளின் பிரகாரம், கடந்த 03 ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | | |
|---|---|---|---|
| | **2011** | **2010** | **2009** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| வரி வருமானம் | 3,685,121,035 | 2,668,851,691 | 2,337,135,037 |
| வரியல்லாத வருமானம் | 941,317,077 | 332,880,166 | 370,343,758 |
| | 4,626,438,112 | 3,001,731,857 | 2,707,478,795 |

**2.4 மனித வள முகாமைத்துவம்**

**2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) மாகாண சபை அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் (பாடசாலைப் பதவியணியினர் தவிர)**

| | **அங்கீகரிக்கப் பட்டவை** | **உள்ளபடி யானவை** | **வெற்றிடங்கள்** | **மிகை** |
|---|---|---|---|---|
| நிறைவேற்று மட்டம் | 1,217 | 1,270 | - | 53 |
| மூன்றாம் மட்டம் | 4,392 | 3,961 | 431 | - |
| இரண்டாம் மட்டம் | 3,539 | 2,700 | 839 | - |
| ஆரம்ப மட்டம் | 4,581 | 4,292 | 289 | - |
| ஏனையவை (அமைய/ தற்காலிக/) | - | 524 | - | 524 |
| | 13,729 | 12,747 | 1,559 | 577 |

**(ஆ) பாடசாலை பதவியணியினர்**

| | அங்கீகரிக்கப் பட்டவை | உள்ளபடி யானவை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| அதிபர்கள் | 1,753 | 1,215 | 538 |
| ஆசிரியர்கள் | 28,653 | 25,756 | 2,897 |
| | 30,406 | 26,971 | 3,435 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

i. கடுகஸ்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் உள்ள 37 பாடசாலைகளில் 62 ஆசிரிய வெற்றிடங்களும், 2011 செப்தம்பர் 01 இல் உள்ளவாறு, நாவுல வலயக் கல்வி அலுவலகத்தின் 23 பாடசாலைகளில் 86 இரண்டாம் நிலை ஆசிரிய வெற்றிடங்களும், 36 பாடசாலைகளில் ஆரம்ப பிரிவில் 72 ஆசிரிய வெற்றிடங்களும், 20 பாடங்களுக்குரிய 20 ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களும், வலப்பனை வலயக் கல்வி அலுவலகத்தில் 102 ஆசிரிய வெற்றிடங்களும், கொத்மலே வலயக் கல்வி அலுவலகத்தில் 78 ஆசிரிய வெற்றிடங்களும், ஹங்குரன்கெத்த வலயக் கல்வி அலுவலகத்தில் 330 ஆசிரிய வெற்றிடங்களும் காணப்பட்டதுடன், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. தெல்தெனிய வலயத்திற்குரிய வெல்கஹவாடிய ஆரம்ப பாடசாலையில் மாணவர்கள் இல்லாமையால் மூடப்பட்டிருந்ததுடன், 2011 ஆகஸ்ட் 02 ஆம் திகதி முதல் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2012 மார்ச் 01 ஆம் திகதி வரை கடமை நிறைவேற்றியமைக்கு எவ்வித எழுத்துமூல ஆவணமும் இல்லாமல் அங்கு பதில் கடமை புரியும் அதிபருக்கு சம்பளமாக ரூபா 154,098 செலுத்தப்பட்டிருந்ததுடன், அவ்வலயத்திற்குரிய தலகுனே ஆரம்ப பாடசாலையும் மாணவர்கள் இல்லாததன் காரணமாக 2011 செப்தம்பர் 06 ஆம் திகதி தொடக்கம் மூடப்பட்டிருந்ததுடன், அந்தப் பாடசாலையின் பதில் கடமை புரியும் அதிபருக்கும் அத்திகதியிலிருந்து 2012 பெப்ரவரி வரை எவ்வித கடமையையும் நிறைவேற்றாமல் சம்பளமாக ரூபா 163,183 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 2.4.2 ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்

நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு உத்தியோகாத்தர்கள் நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும், போக்குவரத்து திணைக்களத்தின் வீதிப் பரிசோதகர் ஒருவர் 2009 ஆம் ஆண்டிலிருந்து தலைமை அமைச்சிற்கும் கலாசாரத் திணைக்களத்தின் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ஒருவரும் கலாசார உத்தியோகத்தர் ஒருவரும் 2009 ஆம் ஆண்டிலிருந்து தலதா மாளிகைக்கும் தலைமை அமைச்சிற்கும் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

### 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.5.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள்

கீழே விபரிக்கப்பட்டவாறு பௌதீக வளங்கள் பயன்படுத்தப்படாமலும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமையும் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்துக்களின் தன்மை | எண்ணிக்கை/ சதுர அளவு | பெறுமதி | பயன்படுத்தப்படாத காலப்பகுதி ஆண்டுகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | காணி | 17 ஏக்கர் 3 ரூட் 29 பேர்ச். | கண்டு பிடிக்க முடியவில்லை | 05 ஆண்டுகள் அளவில் |
| (ஆ) | கட்டிடங்கள் (ஆசிரியர் விடுதி) | 111 | -மேற்படி - | 03 – 05 ஆண்டுகள் |
| (இ) | வாகனங்கள் | 01 | 225,000 | 05 ஆண்டுகள் அளவில் |
| (ஈ) | இயந்திர உபகரணங்கள் | 136 | கண்டு பிடிக்க முடியவில்லை | 03 – 05 ஆண்டுகள் |
| (உ) | அலுவலக உபகரணங்கள் | 01 | 29,400 | 02 ஆண்டுகள் அளவில் |
| (ஊ) | ஏனையவை | 2250 | 242,736 | 03 – 05 ஆண்டுகள் |

### 2.5.2 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

நி.பி 756 இன் பிரகாரம் 271 பாடசாலைகளில் மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.5.3 நடைமுறைச் சொத்துக்கள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக காணப்பட்ட ரூபா 368,492 பெறுமதியான சொத்துக்கள் நடைமுறைச் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.5.4 பெறவேண்டிய கணக்குகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,608,851 ஆக இருந்ததுடன், அதில் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 326,801 ஆக இருந்தது.

### 2.5.5 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மற்றும் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 688,582,335 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 122,187,987 ஆக இருந்தது.

## 2.6 இனங்காணப்பட்ட நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போதும் நிறுவனத்தில் பேணப்பட்ட தகவல்களின் பிரகாரமும் கீழே காட்டப்பட்டுள்ள நட்டங்களும் சேதங்களும் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) மாகாண சபைக்குச் சொந்தமான 11 வாகனங்கள் விபத்திற்கு உட்டிருந்தமையால், ரூபா 2,833,167 பெறுமதியான நட்டமும், மாகாண சபை அமைச்சுக்களினதும் 04 திணைக்களங்களினதும் கீழ் காணப்பட்ட 16 சொத்துக்களுக்கு ஏற்பட்டிருந்த ரூபா 31,584,693 பெறுமதியான சேதங்கள் தொடர்பாக நி.பி. 103,104 மற்றும் 109 இன் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தலைமை அமைச்சின் கீழ் காணப்படும் நூலக சேவைகள் சபையின் கட்டிடத்தின் 02 மாடிகள் கணனி வகுப்புக்கள் நடாத்துவதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு 50% இலாப சதவீதத்தை பெற்றுக்கொள்ளும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் 03 ஆண்டு காலத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்படி புரிந்துணர்வு உடன்படிக்கை ஆரம்பத்தில் ரூபா 4,469,596 பணம் அந்நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த 2010 நவம்பர் முதல் கணக்காய்விற்குட்பட்ட 2012 ஆகஸ்ட் வரையான 22 மாத கால முடிவில் அமைச்சிற்கு ரூபா 1,929,988 ஆன திரட்டிய இலாபம் மட்டுமே கிடைக்கப்பெற்றிருந்தது. அதன் பிரகாரம் உடன்படிக்கை காலத்தின் 2/3 இற்கு அண்மித்த காலம் கடந்திருக்கையில் செலவினத்திற்கு ஒப்பாக போதியளவில் நலனொன்று கிடைத்திருக்கவில்லை.

(இ) பள்ளேகல ஆயுர்வேத உற்பத்திச்சாலையில் ரூபா 8,629 பெறுமதியான 05 பூர்த்திசெய்யப்பட்ட மருந்து வகைகளும் 9 பிரதேச மற்றும் மாவட்ட வைத்தியசாலைகளில் ரூபா 869,059 பெறுமதியான 187 மருந்து வகைகளும் நுவரெலியா மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகக் களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 2,777,124 பெறுமதியான 242 மருந்து உருப்படிகளும் காலாவதியாகியிருந்தன.

(ஈ) பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபையின் நியதிச்சட்ட விதிக்கு முரணாக ஊழியர்களை சேர்த்தல் மற்றும் அதிகாரசபையால் பொறுப்பற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தால் அதிகாரசபைக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த வழக்கொன்றிற்காக ஊழியர் இழப்பீட்டினை செலுத்தியதன் காரணமாக மீளாய்வாண்டில் அதிகாரசபைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 626,400 ஆக இருந்தது.

(உ) நுவரெலியா ஒன்றிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி செயற்திட்ட அலுவலகக் கட்டிடம் மற்றும் மத்திய மாகாண முகாமை அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் விடுதிக் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் அக்கட்டிடங்களின் நிர்மாண நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்ட ஆரம்ப ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்டிராமையால் அவர்களுக்கு செலுத்தப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணத்தொகை மற்றும் வழக்கு கட்டணம் ரூபா 10,349,184 அளவில் மாகாண சபையால் இழக்கப்பட்டிருந்தன.

## 2.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபையால் 2011 ஆம் ஆண்டிற்காக ரூபா 163,296 செலவிடப்பட்டு பத்திரிகை அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டு அச்சீட்டாளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது ரூபா 416,050 தொகையான அச்சீட்டு நடவடிக்கை அப்பதிவு செய்யப்பட்ட வழங்குனரிடமிருந்து மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நுவரெலியா வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய 05 அறைகளுடன் கூடிய சுற்றுலா விடுதி 2000 ஆம் ஆண்டிலிருந்து வலயத்தின் அலுவலக உதவியாளர் ஒருவர் மற்றும் அவரின் குடும்பத்திற்காக எவ்வித வாடகையும் அறவிடப்படாமல் ஒதுக்கப்பட்டிருந்தது. 2005 முதல் 2011 ஆம் ஆண்டு வரை அவ்வீட்டின் மின்பட்டியலாக ரூபா 150,721 தொகை மாகாண சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2010 ஆம் ஆண்டிற்காக இலங்கை திரிபோஷா சங்கத்திடமிருந்து 12,192 திரிபோஷா பைக்கற்றுக்கள் நுவரெலியா மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 5,962,950 பெறுமதியான 1,893 திரிபோஷா பைக்கற்றுக்கள் அந்த அலுவலகத்தால் பகிர்ந்தளிக்கப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

## 2.9 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) உடதும்பர சித்தார்த்த ஆரம்ப பாடசாலையை ஆரம்பிப்பதற்காக, பிரோட்வே எபரல் நிறுவனத்திற்குச் சொந்தமான ஆதனங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 20,000,000 பணம் 2010 திசெம்பர் 31 ஆம் திகதி உடதும்பர பிரதேச செயலகத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2012 நவம்பர் 20 ஆம் திகதி வரை இரண்டு ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதும் குறித்த கொள்வனவு மேற்கொள்ளப்படாமல் அப்பணம் பொது வைப்புக் கணக்கில் தடுத்துவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) உடுநுவர பிரதேச செயலகப் பிரிவின் தவுலகல கிராம சேவையாளர் பிரிவின் வ.ப. உடுநுவர பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த காணிக்காக 2011 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 314,300 ஆக இருந்தது.

## 2.10 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொழுவு பிரதேச செயலகத்தின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள காணித் திணைக்களத்திற்குரிய காணியொன்று 1998 ஆம் ஆண்டிலிருந்து தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 120,000 தொகையான வருடாந்த குத்தகைக்கும் ரூபா 360,000 தவணைத் தொகைக்கும் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், 2011 திசெம்பர் 31 வரையில் அந்நிறுவனத்திடமிருந்து வாடகை, தவணைப் பணம் மற்றும் தண்டப் பணமாக ரூபா 930,490 பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது. கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2012 ஒக்தோபர் 16 ஆம் திகதி வரையில் காணியின் உரித்தை வழங்கி 14 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், குத்தகையொன்று வழங்காமை காரணமாக பணத்தை அறவிட்டுக் கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) உடுநுவர பிரதேச வைத்தியசாலையின் மருந்தகத்தில் காணப்பட்ட காலாவதியான 04 மருந்து வகைகள் கணக்காய்வு தினமான 2011 யூலை 19 ஆம் திகதி வரையில் நோயாளர் பிரிவின் நோயாளர்களுக்கும் தங்கியிருக்கும் நோயாளிகளுக்கும் வழங்கப்பட்டு வந்ததுடன், மாத்தளை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய மருத்துவ வழங்கல் பிரிவு 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 529,056 பெறுமதியான 18 வகையான தரமில்லாத மருந்துகள் (Qulity Fail Drugs) நோயாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன.

## 2.11 செயலாற்றல்

### 2.11.1 அரசாங்க மானியம்

மாகாண சபை அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் செலவு செய்தல்கள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| | மூலம் | அரசிடமிருந்தான மானியங்கள் பெறுவனவு | செலவினம் |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| i | பண்புகள் அடிப்படையிலான | 337,300,000 | 400,419,141 |
| ii | மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியம் | 1,172,150,000 | 1,879,875,142 |
| iii | திரண்ட மானியம் | 13,696,516,000 | 13,696,516,000 |
| iv | ஏனைய மானியம் | 822,760,530 | 294,800,950 |
| | | 16,028,726,530 | 16,271,61,233 |

## 2.11.2 மாகாண அபிவிருத்தி திட்டம்

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய மற்றும் தொடர்ச்சியான வேலைகளின் கீழ் ரூபா 1,712,566,290 பெறுமதியான 5653 முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், வேலை முன்மொழிவுகளின் முன்னேற்றம் கீழே அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

| | | புதிய வேலை | தொடர்ச்சியான வேலை | மொத்த வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| i | முழுமையாகப் பூர்த்தியாக்கப்பட்டவை | 5052 | 345 | 5397 |
| ii | 50% இற்கு குறைவாகப் பூர்த்தி செய்யப்பட்டவை | 112 | 09 | 121 |
| iii | 50% இற்கு மேலாக பூர்த்தி செய்யப்பட்டவை | 20 | 12 | 32 |
| iv | ஆரம்பிக்கப்படாதிருந்தவை | 67 | - | 67 |
| v. | சர்ச்சைக்குரியவை/ பிரச்சினைக்குரிய நிலைமையின் கீழ் | 36 | - | 36 |
| | மொத்தம் | 5287 | 366 | 5653 |

## 2.12 ஒப்பந்த நிர்வாகம்

### 2.12.1 செயற்திட்டங்கள்/ முன்மொழிகளை அமுல்ப்படுத்துவதில் தாமதம்

பின்வரும் செயற்திட்டங்கள்/ முன்மொழிவுகளைச் செயற்படுத்துவதில் நீண்ட தாமதம் அவதானிக்கப்பட்டது.

| செயற்திட்டம் முன்மொழிவுகள் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | முடிவுறுத்த எதிர்பார்க் கப்பட்ட திகதி | 2011 திசெம்பர் 31 வரை மேற்கொள்ளப் பட்ட செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| மத்திய மாகாண பிரதான நிர்வாக தொகுதி நிர்மாணம் (கட்டம் I மற்றும் II ) | 621,866,055 | 2006.11.02 | 2011.12.31 | 966,202, 533 | நிர்மாண நடவடிக்கைகள் முறைப்படி நிறைவேற்றப்படாமை மாகாண சபையின் பலவீனமான மேற்பார்வை. |
| ஹாரிஸ்பத்துவ மாபாமடுல்ல தல்கஸ்கொட்டுவ மின் நீடிப்பு | 126,000 | 2011.12.26 | 2011.12.31 | 126,000 | மின் இணைப்பினை வழங்காமை |
| திகன விளையாட்டரங்கு நிர்மாணம் | 338,837,588 | 2009.09.03 | 2011.02.28 | 175,759,432 | ஒப்பந்தக்காரருக்கு முறையான மதியுரை சேவைகள் கிடைக்காமையும் நிர்மாணத்திற்காக போதியளவு ஆளணி ஈடுபடுத்தாமையும் |

### 2.12.2 முற்றாக கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்/ திட்டங்கள்

கீழே காட்டப்பட்டுள்ள செயற்திட்டங்கள்/ முன்மொழிவுகள் முழுமையாக கைவிடப்பட்டிருந்தது.

| செயற்திட்டம்/ முன்மொழிவுகள் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2011 திசெம்பர் 31 வரை மேற்கொள்ளப்பட்ட செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | |
| <u>உடுநுவர பிரதேச செயலகம்</u> | | | | |
| வட்டதெனிய கோனடிக்கா வீதி அபிவிருத்தி | 35,000 | ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செலவிடப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| மாத்கமுவ ரஜமஹா விஹாரையின் விஹாரை மன்திரின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக | 25,000 | - மேற்படி - | - மேற்படி - | அறிவுறுத்தப்படுத்தப்பட்டிருந்தும் விண்ணப்பத்தை சமர்ப்பித்த தரப்பினர் வருகை தரவில்லை. |
| பள்ளே அலுதெனிய கலுகுண்டா வயலிலிருந்து ரம்மா கடை வரை வீதியை அமைத்தல். | 25,000 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| வெலம்பொடை முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலயத்தின் பெயர்ப்பலகையின் எஞ்சிய பகுதியை நிர்மாணித்தல். | 30,000 | - மேற்படி - | - மேற்படி - | விண்ணப்பதாரருக்கு அறிவுறுத்தப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| கெலிஓயா பாயின்கமுவ வீதியின் சமகி மாவத்தை திருத்தம் செய்தல் | 30,000 | - மேற்படி - | - மேற்படி - | மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| <u>யட்டிநுவர பிரதேச செயலகம்</u> | | | | |
| யட்டிநுவர பிரதேச செயலகப் பிரிவின் பதிவுசெய்யப்பட்ட நலன்புரி சங்கங்கள் மகளிர் சங்கங்களுக்கு உபகரணங்கள் வழங்கல் | 60,000 | - மேற்படி - | - மேற்படி - | 2011.12.28 ஆம் திகதி முன்மொழிவு கிடைத்தமையால் காலம் போதாமை |
| யட்டிநுவர பிரதேச செயலகப் பிரிவில் 04 பேருக்கு சுயதொழிலாக ஆடை தைப்பதற்காக தையல் இயந்திரங்கள் வழங்கல். | 40,000 | ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செலவிடப்பட்டிருக்கவில்லை. | நலனாளிகள் முன்வராமை |
| உடரன்மீவல கிராமத்திற்கு நுழையும் வீதிக்கு கொங்கிரீட் இடல் | 50,000 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| மல்கம்மன சந்தியிலிருந்து கிராகம கொரகாங்க | 100,000 | - மேற்படி - | - மேற்படி - | இரத்துச் செய்யபட்டது |

| | | | | |
|---|---|---|---|---|
| வீதிக்கு தார் ஊற்றி அபிவிருத்தி செய்தல் II ஆம் கட்டம். | | | | |
| மல்கம்மன சந்தியிலிருந்து கிராகம கொரகாங்க வீதிக்கு தார் ஊற்றி அபிவிருத்தி செய்தல் III ஆம் கட்டம். | 100,000 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| ஏதன்டுவாவ கிழக்கு பிரிவின் குறுக்கு வீதியின் ஒரு பகுதியை அமைத்தல். | 100,000 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| மல்கம்மன சந்தியிலிருந்து கிராகம கொரகாங்க வீதிக்கு தார் ஊற்றி அபிவிருத்தி செய்தல் I ஆம் கட்டம். | 100,000 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| பிலிமதலாவ கிராகம நரிஅங்க வயல்வெளிக்கு செல்லும் வாய்க்காலை அமைத்தல் II ஆம் கட்டம். | 50,000 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| கிராகம நரிஅங்க வயல்வெளிக்கு செல்லும் வாய்க்காலை அமைத்தல். | 30,000 | ஆரம்பிக்கப்பட் டிருக்கவில்லை. | செலவிடப்பட்டிருக்கவில்லை. | இரத்துச் செய்யப்பட்டது |
| <u>கங்கவட்ட கோரளை பிரதேச செயலகம்</u><br>பஹல தென்னேகும்புர திரு. நவ்சாட் அவர்களின் வீடு வரையுள்ள வீதிக்கு கொங்கிரீட் இடல். | 50,000 | - மேற்படி - | - மேற்படி - | நடைமுறைப்படுத்தவில் லையென பிரதேச சபை அறிவித்தமை |
| <u>அம்பகமுவ பிரதேச செயலகம்</u><br>அம்பகமுவ பிரதேச செயலகத்தின் லொயினொன் தோட்டம் நோன்கோச் பிரிவுகளிற்கு மின்சாரம் வழங்கல். | 50,000 | - மேற்படி - | - மேற்படி - | கினிகத்ஹேன மின்பொறியியலாளருக்கு மதிப்பீடொன்று தயாரித்து அனுப்புமாறு கேட்கப்பட்டிருந்த போதும் அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டி ருக்கவில்லை. |
| மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பால் விற்பனை நிலையங்களை அமைத்தல். | ஒரு விற்பனைசா லைக்கு ரூபா 100,000 | - மேற்படி - | - மேற்படி - | ஒரு விற்பனைசாலைக்கு ரூபா 100,000 இற்கு மேற்பட்ட பணம் செலவு செய்ய வேண்டியுள்ளமை |

### 2.12.3 நிர்மாணிப்புகள்

நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பான வெளிக்கள பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) கண்டி பள்ளேகலையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மத்திய மாகாண பிரதான நிர்வாக தொகுதியின் நிர்மாண வேலையின் I மற்றும் II ஆம் கட்டங்களுக்குரிய உடன்படிக்கை செய்யப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி ரூபா 621,866,055 ஆக இருந்த போதிலும், அதற்குரிய வேலை பூர்த்தி செய்யாதிருக்கையில் 2012 செப்தம்பர் 30 ஆம் திகதி வரையில் ஒப்பந்த கம்பனிக்கு ரூபா 892,564,571 தொகை செலுத்தப்பட்டமையால் உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையை மிகைத்து ரூபா 270,698,516 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே I ஆம் கட்டத்திற்கான தாமதக் கட்டணம் ரூபா 16,310,000 உம் II ஆம் கட்டத்திற்கான தாமதக் கட்டணம் ரூபா 13,365,000 உமாக ரூபா 29,675,000 தொகை அறவிடப்பட வேண்டிய போதிலும், 2012 செப்தம்பர் 30 ஆம் திகதி வரையில் ரூபா 4,850,000 மட்டுமே அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாசபை மூலம் ராசிங்கொல்ல தெரிபஹ வீதி நிர்மாண வேலைக்குத் தேவையான ஏ.பி.சீ அளவிலான காபட் 905 மெட்ரிக் தொன்னாக இருந்த போதிலும் அதிகாரசபையால் தயாரிக்கப்பட்டிருந்த பட்டியலில் இவ்வீதிக்காக 1015.76 மெட்ரிக் தொன் காபட் பயன்படுத்தப்பட்டதாக தொழிநுட்ப உத்தியோகத்தரால் அறிக்கை தயாரிக்கப்பட்ட காரணத்தால் ரூபா 1,157,244 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.13 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மாகாண சபையின் நிதிசார் சிறப்புத் தன்மை மற்றும் நிதிசார் முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பபடுகின்றது.

(அ) நிர்மாணிப்புக்கள்

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு

(இ) வாகனக் கட்டுப்பாடு